# தீர்மானங்கள் 2016

## இரக்கத்தின் ஊக்கம் :

கடந்த 2015 ஆண்டு முழுவதுமே தேசே என்ற இடத்தில் எங்களது பணியானது புதிய ஒருங்கிணைப்புகளை எவ்வாறு செயல்படுத்துவது என்றே இருந்தது. இதற்குக் காரணம் ஒன்றுபட்ட ஒருங்கிணைப்பு என்பது இன்றைய தினத்தின் முக்கியத் தேவையாகும். இன்று உலகம் முழுவதிலுமே – அது விசுவாசிகளாக இருந்தாலும் சரி அல்லது அவ்விசுவாசிகளாக இருந்தாலும் சரி, எந்த மதத்தினராக இருந்தாலும் சரி – அவர்களிடையே தற்போது காணப்படுவது என்னவென்றால் ஒரே குழப்பம், கவலை, அலைபாயும் மனது – சமூக மற்றும் சுற்றுப்புற சூழல் சம்பந்தமான பிரச்சனைகள் போன்றவைகளே.

மனிதாபமற்ற கொள்கைக்காக எத்தனையோ ஆயுதம் ஏந்திய வன்முறைகள் தாண்டவமாடுகிறது. இதனைத் தவிர்த்து ஓர் சிரிய தெளிந்த மனதுடன் – நமது நம்பிக்கை எனும் யாத்திரையை தொடர்ந்தோமென்றால் பாதுகாப்பற்ற வாழ்வு மேலும் பயத்துடன் கூடிய வாழ்வை நாம் மேற்கொள்ள முடியும். இதைவிட மேலும் 'மிக அவசரம்' என்னவென்றால் இன்று உலகில் சகோதர பரஸ்பர அன்புடன், ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளும் மனப்பான்மையை கொண்ட வாழ்வு நெறியாகும்.

கடல் அலை பொங்கி எழுந்தாலும் கற்பாறையின் மேல் கட்டின வீடு சேதமடையாது (மத் 7:24–25). இயேசு நாதரின் வார்த்தைகள் மீது வீடு கட்ட நாம் பிரியப்படுவோம் மேலும் அவ்வாறு கட்டும்போது நம் பாறையானது ஆண்டவரின் சுவிசேஷ அடிப்படை உண்மைகளை கொண்டதாக, அனைத்திற்கும் ஏற்புடையதாக அமையும். அதாவது சந்தோஷம் – எளிமை – இரக்கம் கொண்டதாக இருக்கும். இதனை சகோ. ரோஜர் அவர்கள் தேசே மையத்தில் அனைவருக்கும் தெளிவாக, தொடர்ந்து கடினமாக சூழ்நிலைகளையும் கடக்க முடிந்தது. இவைகளை தொடர்ந்து தினம் தினம் கடைபிடிக்க சகோ. ரோஜர் அவர்கள் வற்புறுத்தினார்கள்.

எங்களது வாழ்க்கை பயணத்தில் மேலே கூறப்பட்ட 3 வார்த்தைகளும் எங்களது அடுத்த 3 ஆண்டுகளுக்காவது எங்களுடன் பயணிக்கும். 2016ம் ஆண்டு மீண்டும் அவ்வாண்டின் கிருபை ஆரம்பித்து – போப்பாண்டவர் பிரான்சிஸ் கூறியது போல் 2016 – இரக்கத்தின் ஆண்டாக செயல்படுத்த உள்ளோம்.

ஆண்டவரின் அன்பின் சாட்சியை நாங்கள் சுமக்க – சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்டுள்ளோம். இதோ, கீழே கொடுக்கப்பட்டுள்ள
5 தீர்மானங்களை கடைபிடித்து, இரக்கத்தின் ஊக்கத்தினை பெறுவோம்.

## முதல் தீர்மானம்

இரக்கத்தின் ஊற்றாக விளங்கும் இறைவனிடம் நம்மை அர்ப்பணிப்போம்.

மன்னிக்கக்கூடிய, ஆறுதல் அளிக்கக்கூடிய, பொறுமையுடைய மற்றும் கணக்கிலடங்கா அன்பினைக் கொண்ட நீர் ஒருவரே ஆண்டவர் (நெகே 9:17)

உன் தந்தையைப் போலவே நீரும் இரக்கமுள்ளவராய் இரும் (லூக் 6:36)

விவியத்தின் படி ஆண்டவர் இரக்கமுள்ளவர். மேலும் நீடிய சாந்தமும் பொறுமையும் உள்ளவர். ஒரு தகப்பன் மற்றும் அவரது 2 மகன்களைப் பற்றி ஆண்டவர் கூறும்போது (லூக்கா 15), அவரது அன்பானது நல்லது செய்யும் மக்களிடம் மட்டுமே உள்ளது என்ற பொருளல்ல, மாறாக அளவற்ற அன்பாகும். ஆண்டவர் மீது வாழ்நாள் முழுதும் நம்பிக்கையோடு இருக்கும் மகன் மீது ஆண்டவர் அன்போடு இருக்கிறார். ஆனால் ஆண்டவரை விட்டுப் பிரிந்து தள்ளிச் சென்றுள்ள மகனோடும் ஆண்டவரது அன்பானது இருந்து கொண்டுதான் உள்ளது.

ஆண்டவர் மனிதனை தன்னைப் போலவே சிருஷ்டித்தார். எனவே ‘ஆண்டவரின் அன்பில் பங்கு கொள்ள, நல்லவற்றை பெற்றுக் கொள்ள அழைக்கப் பட்டிருக்கிறீர்கள்’ இரக்கத்தின் இதயத்தை பெற்றிருக்கும்போது, இறைவனோடு இணைந்த அன்பு எனும் ஆடையை அணிந்திருப்பதும் ஆண்டவரின் விருப்பம் (சசெராவில் உள்ள பாசில், 4ம் நூற்றாண்டு)

சில மணி நேரங்களுக்கு மட்டும் இறைவனின் அன்பு கிடையாது, மாறாக வாழ்நாள் முழுதும் நமது இரக்கத்தினால் நாம் அன்பின் பிம்பமாக இருப்போம். நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதால் பிற மத விசுவாசிகளோடும் நாம் நமது இரக்கம் மற்றும் அன்பின் பகிர்ந்து கொள்ளுதல் நம் வாழ்வின் மையக் கருத்தாகும்.

- நாம் கடவுளின் அன்பை வரவேற்போம். எப்பொழுதும் கடவுள் நமக்கு தம் இதயத்தை மூடவே மாட்டார். மேலும் நமது பாதுகாவலனே கடவுளின் உண்மையான நற்கிரியைதான். நமது பாவங்களால் நாம் சறுக்கி விழும்போதும் கூட கர்த்தரின் மெய்யான அன்பு நம்மைத் தாங்குகிறது. ஒரு வேளை கடவுளை விட்டு வெகுதூரம் தள்ளிச் சென்றிருந்தாலும், மீண்டும் கடவுளிடம் விரைவில் திரும்பி வர தாமதிக்கக் கூடாது. விரைவில் வந்து நமது நம்பிக்கையை அவர் மேல் வைத்து விட வேண்டும். ஏனென்றால் அவர் எப்பொழுதும் நம்மை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறார்.
- நாம் எப்பொழுதும் ஜெபத்தினை ஓர் ‘கடினமான தேடுதலாக’ பார்க்கக் கூடாது, அதற்கு மாறாக ஜெபத்தினை நாம் நின்று நன்கு மூச்சை விட்டு சுவாசித்து வரவேற்க வேண்டும். காரணம் அப்பொழுது பரிசுத்த ஆவியானது உள்ளத்தை ஆண்டவரின் அன்பால் நிரப்பும் மட்டுமல்லாது தொடர்ந்து நமது இரக்கத்தின் வாழ்வை தொடர துணை செய்யும்.

## இரண்டாவது தீர்மானம்

மீண்டும் மீண்டும் மன்னித்தல்

எப்பொழுதும் உன்னை இரக்கம், பரிவு, மனித நேயம் உயர்ந்த உள்ளம் மற்றும் பொறுமை என்னும் ஆடைகளால் அலங்கரித்துக் கொள். அடுத்தவர்களை பொறுத்துக் கொண்டும் பிறர் தவறுகளை மன்னித்துக் கொண்டும் அடுத்தவர் செய்யும் பிழைகளை பொருட்படுத்தாமலும் வாழ வேண்டும். ஆண்டவர் நம்மை மன்னிப்பது போல, நாமும் பிறரை மன்னித்தல் வேண்டும். (கொலோ 3:12–13)

ஒரு முறை பேதுரு இயேசுவிடம் வந்து 'போதகரே எத்தனை முறை எனக்கு எதிராக பாவம் செய்யும் சகோதர, சகோதரிகளே. நான் மன்னிக்க வேண்டும்?' என்று வினவினார். அதற்கு இயேசு 'ஏழு எழுபது தரம்' என்றார். (மத் 18:21–22)

இறைவன் நம்மை என்றுமே மன்னித்துக் கொண்டுதான் இருக்கிறார். அவர் இப்புவியுலகில் வாழ்ந்த காலமும் ஏன் அஹ்ர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கடைசி நிமிடம் வரையிலும் கூட பிறர் தவறுகளை, தன்னை சிலுவையில் அறைந்தவர்களையும் அவர் மன்னித்துக் கொண்டுதான் இருந்தார். யாரையும் அஹ்ர் தண்டிக்க தயாராகவே இல்லை.

'நாம் மன்னிக்கப்பட்டுள்ளோம்' அதற்கு ஈடாக 'நாம் பிறரை மன்னிக்க வேண்டும்' என்ற கூற்றினை நினைப்பதே நமது விடுதலையின் மகிழ்ச்சி ஆகும். இதுதான் நமது உள்ளார்ந்த சமாதானம் என்பதை ஆண்டவர் நமக்கு தெரியப்படுத்த விரும்புகிறார்.

ஆண்டவரை நேசிக்கும் ஆலய மக்களாகிய சபையார் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது நமது ஆலயமானது கிருபையினாலும், இரக்கத்தினாலும் மாற்றப்பட வேண்டும் என்பதே, பிறர் துன்பங்களை கேட்கவும், குணப்படுத்தவும், சமாதானம் சொல்லவும் போன்ற புனிதமான காரியங்களை சபையார் செய்யும் பொழுது அவ்விடமானது அன்பின் தகவல் மையமாகவும், ஆறுதல் கூறும் இடமாகவும், சமாதானம் படுத்தும் மையமாகவும் மிக முக்கியமாக உயிர்த்தெழுந்த இயேசுவின் பிரதிபப்பாகவும் விளங்குகிறது. பிறர் துன்பம் கண்டு விலகாமலும், தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்காமலும், கடினத்தன்மையிருந்து விலகி இருப்பதாலும் மட்டுமே நாம் ஆண்டவர் அன்பை / நமது நம்பிக்கையை நம் உள்ளத்தின் ஆழத்திற்கு செலுத்த முடியும் (சகோ. ரோஜர்)

அதற்காக ஆண்டவரின் மன்னிப்பை அந்திக்கு எதிராக, சில பல குற்றங்களுக்கு எதிராக பயன்படுத்தி விடக்கூடாது. அதற்கு மாறாக, நாம் நமது தவறுகளை உணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் இவ்வுலகிலும், நம்மைச் சுற்றிலும் நடந்து கொண்டிருக்கும் குற்றங்களைப் பற்றியும் தெரிந்து

வைத்துக் கொள்ள வேண்டும். நாம் எவ்வளவுக் கெவ்வளவு சரியானவற்றை செய்யவேண்டுமோ, அவைகளை சரியான முறையில் செய்ய வேண்டும்.

- பிறரை மன்னிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். ஏழு ஏழுபது தரம் கூட மன்னிக்க தயாராக இருக்க வேண்டும். காயம் ஒரு வேளை பெரியதாக இருந்தால், நாம் முயற்சி செய்து கொண்டே ஒவ்வொரு கட்டமாக முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். மன்னிக்கும் எண்ணத்தை தள்ளிக் கொண்டே போனால் – அதன் விளைவு நலமானதாக இருக்காது.
- ஆலயம் என்பது 'ஓர்' இரக்கத்தின் சபைக் கூடம் என்பதனை பிறருக்கு வெட்ட வெளிச்சமாக எந்தவித வேற்றுமையையும் காட்டாது, நம்மைச் சுற்றி உள்ளவர்களிடம் பொறுமையின் எல்லையைக் காட்டி, பிறரை தீர்மானிக்கும் எண்ணத்தை கைவிட்டு ஏழைகளுக்காக இரக்கப்பட்டு, பிறரை மன்னித்து, அரவணைத்து நம் பெருந்தன்மையான உள்ளத்தை பிறரிடம் காட்ட வேண்டும்.



ஈகோன் இரக்கம்

அவர், தம்மை நேர்மையாளர் எனக் காட்ட விரும்பி, "எனக்கு அடுத்திருப்பவர் யார்?" என்று இயேசுவிடம் கேட்டார். அதற்கு அவர் மறுமொழியாகக் கூறிய உவமை; "ஒருவர் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும்போது கள்வர் கையில் அகப்பட்டார். அவருடைய ஆடைகளை அவர்கள் உரிந்து கொண்டு, அவரை அடித்துக் குற்றுயிராக விட்டுப் போனார்கள். குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவரைக் கண்டதும் மறு பக்கமாக விலகிச் சென்றார். அவ்வாறே லேவியர் ஒருவரும் அவ்விடத்துக்கு வந்து அவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார். ஆனால் அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர்மீது பரிவு கொண்டார். அவர் அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக் கொண்டார். மறுநாள் இருதெனாரியத்தை எடுத்து, சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து, "இவரைக் கவனித்துக் கொள்ளும்; இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்" என்றார். "கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகிறது?" என்று இயேசு கேட்டார். அதற்கு திருச்சட்ட அறிஞர், "அவருக்கு இரக்கம் காட்டியவரே" என்றார். இயேசு, "நீரும் போய் அப்படியே செய்யும்" என்று கூறினார். (லூக் 10:29-37)

## மூன்றாவது தீர்மானம்

துன்பத்தில் மற்றும் துயரத்தில் இருப்பவர்களுக்கு தனித்தோ அல்லது பிறருடனோ சென்று ஆறுதல் அளித்தல், தன்னிடம் உள்ளவற்றை பசியோடு மற்றும் துயரப் படுபவர்களுக்கு அளித்து அவர்களது கஷ்டத்தை நீக்க நாம் முயற்சித்தால், நமது ஒளியானது இருளிலும் பிரகாசமாக வீசும். மற்றும் நமது இருளானது மதிய வேளையைப் போல் பிரகாசமாக இருக்கும்.

நம்மிடையை செல்வத்தை வைத்துக் கொண்டு, அது இல்லை என்று கண்ணுக்குத் தெரிந்த சகோதர, சகோதரிகளிடம் கூறுவோமேயென்றால், காணாத தேவன் நமக்கு எவ்வாறு அருளுவார்? (1 யோவா 3:17)

இரக்கத்தின் மையக் கருத்தானது யாதெனில் “இறைவன் நம் ஒவ்வொருவரையும் அன்பினால் தாங்கிக் கொண்டிருக்கிறார் என்றும் மேலும் நல்ல சுமாரியன் நடந்துக் கொண்ட விதத்தையும் தான் தெரிவிக்கிறது”

பிறரின் துன்பங்களை காணும் போதெல்லாம் நம் மனது இரக்கப்பட வேண்டும். நம்மிடம் செல்வம் இருக்கும் போது, அது இல்லாதவர்களிடம் நாம் கொடுக்க வேண்டும். வீடில்லாதவர்கள் பல பேர் உண்டு. பல வயோதிகர்கள் தங்கள் இல்லத்தை இழந்து நாடோடிகளாக திரிபவர்கள் பல உண்டு. எத்தனையோ பேருக்கு கல்வி இல்லை, கலைகளும் கிடையாது, கலாச்சாரமும் கிடையாது.

ஏழைகள் மீது நாம் காட்டும் அன்பை ஆண்டவர் நம்பி கூறுவது என்னவென்றால் “நான் பசியாய் இருந்தேன். எனக்கு உண்ண உணவு கொடுத்தீர்கள்” (மத் 25). அவதியுறும் ஒவ்வொருவரின் வயையும் ஆண்டவர் உணர்ந்து அவர்களை விடுதலையாக்குகிறார். இவ்வுலகின் இறுதி நாள் மட்டும் ஏழைகளின் கண்ணீரையும், துன்பத்தினையும் துடைக்கிறார்.

நாம் சில பல சோதனைகளில் காயப்படும் பொழுது கிறிஸ்து அதன் பொறுப்பை எடுத்துக் கொள்கிறார். அவரது கருணைப் பார்வையே நம் அருகில் வருபவரிடம் இருந்து தெரிந்து கொள்ள முடியும். நல்ல சமாரியனைப் போல் கருணைப் பார்வையை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

- சாலை ஓரங்களில் துன்பப்படுபவர்களை கண்டு நாம் ஒதுங்கி செல்லாமல், நாம் தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களாக கூடியோ சென்று அவர்களுக்கு உதவிடல் வேண்டும். இரக்கம் என்பது மனம் சார்ந்த வார்த்தை அல்ல மாறாக இன்றைய தேவை – இதற்கு எல்லையே கிடையாது. நமது கடமைக்கு ஓர் எல்லை உண்டு. ஆனால் இரக்கத்திற்கு கிடையாது. அது ஒரு போதும் “சரி, போதும் நான் எனது கடமையை செய்து முடித்து விட்டடேன்” என்று கூறாது.

## நான்காவது தீர்மானம்

சமூக அக்கறையுடன் கூடிய இரக்கத்தை விரிவுபடுத்துதல்.

பூமியில் அன்பு, நீதி, நன்மை செய்யும் நானே கர்த்தர் (ஜெரே 9:23)

இதைத்தான் கடவுள் உன்னிடம் எதிர்பார்க்கிறார் அதாவது சரியாக நடக்கவும், இரக்கத்தை நேசிக்கவும் மற்றும் இறைவனோடு பவ்யமாக நடப்பதையும் விரும்புகிறார். (மீகா 6:8)

இறைவனின் இதயத்தைப் பொருத்தவரையில் உலகில் உள்ள அனைவரும் ஒரு குடும்பமே எனவே இரக்கம் என்பது மிகப் பரந்து விரிந்து காணப்படும் ஒன்றாகும்.

உலகில் உண்மையும், நேர்மையும் உண்மையில் ஏற்பட வேண்டும் என்றால், உலகில் உள்ள அனைத்து நிறுவனங்களும் ஒன்று பட்டு, மிகச் சிறந்த நீதியும், சமாதானமும் அடைய ஜனநாயக ரீதியில் சட்டங்களை இயற்ற வேண்டும்.

இன்றைய உலகில் ஏழை நாடுகள் இன்னும் ஏழ்மையான நாடாகவே விளங்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம், சில பல நாடுகள் அவ்வேழை நாடுகளின் கனிம வளங்களை சுரண்டுவதே காரணமாகும். இதைப் பொருத்த வரையில் நம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றாலும், அவர்களது கடனை நாம் மன்னிப்பதால் அங்கே நீதியை நிலை நாட்ட முடியுமே. இன்றைய தினம் விவியம் நமக்கு உரைப்பது என்னவென்றால், உங்கள் வீட்டுப் பிள்ளைகள் ஏழைகளாகி, தங்களை கவனித்துக்

கொள்ள வழி இல்லாமருந்தால், நாம் கண்டிப்பாக ஒரு வெளி ஆளைப் போல இருந்துக் கொண்டு கூட நாம் அவர்களுக்கு உதவுவோம். அதன்மூலம் அவர்களும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்க முடியுமே? (லேவி 25:35)

இன்று உலகில் பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் தங்கள் தாய் நிலங்களை விட்டு வெளியேற்றப்படுகின்றனர். இவ்வாறு அவர்கள் செல்வது அவர்களுக்குள்ளே ஊக்குவித்தலை தோற்றுவிக்கிறது. இது எத்தகைய தடைகளுக்கும் மேலாக, பலமுள்ளதாக உள்ளது. இதில் கண்டிப்பாக ஆப்பிரிக்காவிருந்து மத்திய கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இடம் பெயர்ந்த நிலைக்கு காரணம் தாங்கள் தான் என்பதை செல்வந்த நாடுகள் முதல் உணர வேண்டும்.

- இதில் ஓர் முக்கியமான விஷயத்தை நாம் உணர வேண்டும். யாதெனில் ஒரு பக்கத்தில் இவ்வாறு இடம் பெயர்தலால் சில பல பிரச்சினைகளை சந்திப்பதோடு, இது ஓர் நல்ல சந்தர்ப்பமும் கூட தங்கள் நாடுகளை விட பணக்கார நாடுகளின் கதவை தட்டும் போது, அந்நாட்டினரின் அனுதாபத்தோடு, அவர்களுடன் வாழும் நிலையும் ஏற்படுகின்றது. அவர்களால் ஓர் புதிய முக்கியத்துவத்தை பெறமுடிகிறதே? இடம் பெயர்பவர்களின் பிரச்சினைகளை நாம் தீர்க்கும்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தங்களது இழந்த முக்கியத்துவத்தை பெற முடிகிறது.
- இப்பொழுது நாம் இடம் பெயர்பவர்களின் நிலை கண்டு பயப்படும் நிலையைத் தாண்டியும் மற்றும் கலாச்சார வேற்றுமைகளை களையும் நிலைக்குள்ளும் செல்ல வேண்டும். ஆனால் இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், யாரெல்லாம் முன்வந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவுகிறார்களோ, அவர்களது நிலை மிகப் பரிதாபமான நிலைக்கு தள்ளப்படுகிறது. பயம் என்பது ஒழிந்தும் போகக் கூடியது இல்லை – சுவர்களுக்குப் பின்னால் தனிமைப்படுத்திக் கொள்வதால் – பிரச்சனை தீராது. மாறாக – யாரை நமக்குத் தெரியாதோ அவர்களுக்கே முதலாவதாக நாம் உதவி செய்ய வேண்டும். எவ்வளவு விரைவில் அவர்களை நம் சமூகத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது எத்துனை முக்கியம்?

## ஐந்தாம் தீர்மானம்

அனைத்து கிரியைகளுக்கும் தேவையான இரக்கம். “ஆறு நாட்கள் வேலை செய், ஏழாம் நாளோ ஓய்ந்திரு, அதனால் உனது எருதுவும், கழுதையும் கூட அந்நாளில் ஓய்வெடுக்கட்டும்” (யாத் 23:12)

ஆறு வருடங்களுக்கு உன் நிலத்தை உழுது, பயிர்களை அறுவடை செய், ஆனால் ஏழாவது ஆண்டில் நிலத்தை தரிசாக, பயன்படுத்தாமல் விட்டு விடு (யாத் 23:10)

கால மொழியில் வாழும் நமக்கு, விவிலயம் கூறுவது என்னவென்றால் – உலக சுற்றுச் சூழலுக்கு நம் அன்பை விஸ்தாரப்படுத்த வேண்டும் – உலக உயிரினங்கள் அனைத்தையும் மதிக்க வேண்டும். காலம் பார்த்து நிலத்தைப் பயிரிட வேண்டும்.

ஓர் மெசபடோமிய கிறிஸ்தவன் கூறுவது என்னவென்றால். “ஓர் இரக்கமுள்ள மனமானது மோசமான விளைவிற்காக நின்று காத்துக் கொண்டிருக்காது அல்லது ஆண்டவரின் கிரியைகளுக்கு ஏற்படும் சோதனைகளை காணும் வரை காத்திருக்காது” (ஐஸக் என்ற சிரியன் 7ம் நூற்றாண்டு) இயற்கை சீற்றங்களினால் வாழ்வை இழக்கும் உயிர்களின் நிலை மிகப் பரிதாபமானது மேலும் தாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இடங்களை விட்டு கால நிலையின் வேறுபட்டால் வெவ்வேறு இடங்களுக்குச் செல்ல நேர்கிறது.

இந்தப் பூமி இறைவனுக்கு சொந்தமானது. மனித இனம் இதை ஓர் பரிசாக எடுத்துக் கொள்கிறது. நமக்கு மிகப் பெரிய பொறுப்பு ஒன்று உண்டு. அது என்னவென்றால் இந்த பூமிக்கோளை நாம் எப்படியாவது காத்திடல் வேண்டும். மேலும் இம்ன் கனிம வளங்களை நாம் வீணாக்கக் கூடாது. உலகம் என்பது ஒரு வரையறைக்கு உட்பட்டது. மனித உயிரினமும் இத்தகைய வரையை தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

பூமிப்பந்தானது பொதுவான நம் வீடு. இன்று நாம் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். சுற்றுப்புற சூழலானது எந்தவித வித்தியாசமும் காட்டாது நமக்கு உதவி புரிகிறது. ஆனால், இன்று பல உயிரினங்கள் அழிந்து விட்டது. இன்னும் இருக்கும் இயற்கைக்கு இன்று அச்சுறுத்தல்

ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் மிக அதிக அளவில் காடுகளை அழித்துக் கொண்டிருக்கின்றனர்.

- எவ்வாறு நாம் நமது ஒன்றுபட்ட சமூக அக்கறை கொண்ட எண்ணத்தை வெளிப்படுத்த இருக்கிறோம்? தினமும் நம் வாழ்வையும் நம்மையும் பாதித்துக் கொண்டிருக்கும் நமது திட்டங்களா? இந்நாட்டின் குடிமகனாக அல்லது நுகர்வோராக இருந்துக் கொண்டு நமது செயல்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவமா? அல்லது நமது சாதாரண வாழ்வு முறைக்கு அளிக்கும் சந்தர்ப்பமா? நமது சந்தோஷம் எதில் இருக்கிறது என்றால் – நமது ஆரம்பரமற்ற எளிய வாழ்வில் தான், நம்மில் சிலர் உண்டு. அவர்கள் நல்ல கால நிலைக்காக உண்ணா விரதம் இருப்பார்கள் மேலும் ஒவ்வொரு மாத பிறப்பிலும் கிடைக்கும் நீதிக்காகவும் உண்ணா விரதம் இருப்பார்கள். இவ்வாறு செய்வது – ஆண்டவரின் இரக்கத்தை நம் இல்லத்திற்கு, பூமிக்கு பெறும் சிறந்த வழியென நினைப்பது தவறு. சந்தோஷத்தில் வாழ்வதே வாழ்வியன் சட்டம்.

வரும் மாதங்களில், டாய்ஸே இளைய தளத்திலும் சமூக வளைதள ஏடுகளிலும் வெளியிட உள்ள விஷயம் என்னவென்றால், “2016 தீர்மானங்கள் குறித்து”. நீங்களும் எங்களுடன் உங்களது எண்ணங்களை பகிர்ந்துக் கொள்ளலாம். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி echos@taize,fr மற்றும் ஏற்கனவே எங்களோடு தொடர்பில் உள்ளவர்களும் பகிர்ந்துக் கொள்ளலாம்.

## தேசே 2016

### ஆண்டு முழுவதும்

ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், இளம் வயதினருக்கான கூட்டமானது ஒழுங்குப்படுத்தப்பட்டு – மக்களுக்கு நம்பிக்கையின் ஊற்று மூலமாக ஆண்டவரின் இரக்கத்தை அறிந்துக் கொள்ளலும் மேலும் அதனைத் தொடர்ந்து அதைக் கண்ணால் உணர வழிகாணும் முறைகள் பற்றியும் மற்றும் அதற்கான வாழ்வு நெறி பற்றியும் உணர வைத்தல்.

### ஆக 28 முதல் செப் 4 வரை

18 முதல் 35 வரையிலான வயதுடைய இளம் பங்காளர்களுக்கானது அவர்கள் மாணவர்களாக இருக்கலாம், இளம் தொழில் மைய கல்வி கற்றவர்களாக இருக்கலாம். தன்னார்வ தொடர்களாக இருக்கலாம் அல்லது வேலையைத் தேடிக் கொண்டிருப்பவர்களாகக் கூட இருக்கலாம். அவர்கள் தாமாக முன் வந்து தங்களது வாழ்வை ஒத்த நிலை பற்றி பிறருடன் கலந்துரையாடலாம்.

### புக்காரெஸ்ட் 2016

சில சகோதரர்கள் மற்றும் 150 இளம் வயதினருடன் (பல நாடுகளில் இருந்து வந்த) – சகோ அலோஸ் அவர்கள் ஏப்ரல் மாதம் 28 முதல் மே மாதம் 1ம் தேதி வரை புக்காரெஸ்ட் சென்று அங்கு ருமேனியாவைச் சேர்ந்த தீவிர கிறிஸ்துவர்களுடன் இணைந்து இறைவனின் உயிர்த்தெழுதல் பண்டிகையைக் கொண்டாடத் தீர்மானித்துள்ளார். (2016ன் உயிர்த்தெழுதல் 1 மாதம் பின்பாக இருக்கும் – கிழக்கில் இருப்பதால்) இந்தப் புனித யாத்திரையானது, இஸ்தான் புல்லுக்கு செல்வது (எபிஃபனி 2013), மாஸ்கோவிற்கு செல்வது (உயிர்த்தெழுதல் பண்டிகை 2011), மாஸ்கோ, மின்ஸ்க், கீவ், லவிவ் (உயிர்த்தெழுதல் பண்டிகை 2015).

**www.taize.fr**